இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 09.01.2026

# ‘பியூஷ்’ போன வாதங்கள்!

“திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தி.மு.க. கூட்டணி இந்துக்களுக்கு எதிரானது என்பது தெளிவாகிறது” என்று ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் சொல்லி இருக்கிறார்.

**“திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றலாம்” என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக்கிளையின் இரு அமர்வு தீர்ப்பளித்து உள்ளது. இதனை வைத்துத்தான் பியூஸ் கோயல் இப்படி பேட்டி தந்துள்ளார். தமிழக பக்தர்களுக்கு நீதி கிடைத்துள்ளதாகவும், தமிழ்நாட்டில் சனாதன தர்மத்தை இழித்தும் பழித்தும் பேசி வருவதாகவும், தனி நீதிபதி உத்தரவை தமிழ்நாடு அரசு செயல்படுத்தவில்லை என்றும், அந்த உத்தரவுக்கு எதிராக அரசு மேல்முறையீடு செய்தது துரதிஷ்டவசமானது என்றும், இது இந்து தர்மத்துக்கு விரோதமானது என்றும், அவர்களது இந்து விரோத மனப்பான்மையை பிரதிபலித்தது என்றும், இப்போது இரண்டு நீதிபதிகள் நீதியை நிலைநாட்டி விட்டதாகவும் பியூஷ் கோயல் சொல்லி இருக்கிறார்.**

இவை அனைத்தும் பியூஷ் போன வாதங்கள் ஆகும். அவருக்கு திருப்பரங்குன்றம் எந்தத் திசையில் இருக்கிறது என்றோ, அங்கு நடந்தது என்ன விவகாரம் என்றோ தெரியாது.

‘திருப்பரங்குன்றம் மலை தூணில் தீபம் ஏற்ற வேண்டும்’ என்பது தனி நீதிபதியின் தீர்ப்பு. அதனை இரண்டு நீதிபதிகள் அமர்வு உறுதி செய்துள்ளது.

திருப்பரங்குன்றத்தில் காலம் காலமாக எங்கே தீபம் ஏற்றப்படுமோ அங்கு தீபம் ஏற்றப்பட்டு விட்டது என்பதை மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் அறிவாரா?

கார்த்திகை தீபம் அன்று திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் கோவிலில் காலம் காலமாக தீபம் ஏற்றும் இடத்தில் தீபம் ஏற்றப்பட்டது. 3.12.2025 புதன்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வழக்கப்படி திருக்கோவிலுக்குள் பால தீபம் ஏற்றப்பட்டது.

அதன்பிறகு அதே நேரத்தில் வழக்கமாக ஏற்றக் கூடிய உச்சிப்பிள்ளையார் கோவிலில் தீப மண்டபத்தில் தீபம் ஏற்றப்பட்டு, பின்பு சுவாமி புறப்பாடு ஆகி, பதினாறு கால் மண்டபம் எதிரே உள்ள இடத்தில் சொக்கப்பனை ஏற்றி சுவாமிக்கு ரஷை சாத்தப்பட்டது. இவை முறையாக நடந்தது. இது பக்தர்கள் அனைவருக்கும் தெரியும்.

**ஆனால், வழக்கமான இடத்தை மாற்றி, வேறொரு இடத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று ஒரு கும்பல், உள்நோக்கத்தோடு பல காலமாகச் செயல்பட்டு வந்தார்கள். மலைப்பகுதியில் இருக்கும் தர்காவுக்கு அருகில் இருக்கும் தூணில் தீபம் ஏற்றுவதன் மூலமாக இரு மதப்பிரிவினர் இடையே மோதலை உண்டாக்கி, அதன் மூலமாக குழப்பத்தை ஏற்படுத்தப் பார்த்தார்கள். இதனை தமிழ்நாடு அரசு அனுமதிக்க வில்லை. இதுதான் பிரச்சினை.**

அதாவது பிரச்சினையை உருவாக்கி, அதன் மூலமாக மோதலை உருவாக்கி, அந்த மோதலை தமிழ்நாடு முழுக்கப் பரப்பி, தமிழ்நாட்டின் அமைதியைக் கெடுக்க ஒரு கும்பல் முயற்சித்தது. இதனை தமிழ் அரசு அனுமதிக்கவில்லை. அத்தகைய கலவரத்தை நிகழ்த்த முடியாத வேதனையைத் தான் பாசிச சக்திகள் இன்று வெளிப்படுத்தி வருகிறார்கள்.

**‘தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி மறுக்கப்படுகிறது’ என்ற வதந்தியை பல காலமாக பரப்பி வருகிறார்கள். உண்மையில் இவர்கள் சொல்வது தீபத் தூண் அல்ல. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நில அளவைக்காக வைத்த தூணைத்தான் ‘தீபத் தூண்’ என்கிறார்கள்.**

மலையில் இருக்கும் சிக்கந்தர் தர்க்காவுக்கும் முருகர் கோவிலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த தர்க்காவுக்கு அருகில் தான் பிரிட்டிஷ் ஆட்சி காலத்து நில அளவைத் தூண் இருக்கிறது. தர்க்காவுக்கு அருகில் இருக்கும் தூணில் தீபம் ஏற்ற வேண்டும், அதனால் குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களது எண்ணம்.

**பிள்ளையார் கோவிலில் கார்த்திகை தீபம் கடந்த 3 ஆம் தேதியன்று ஏற்றப்பட்டு விட்டது. ‘அரசு தீபம் ஏற்ற அனுமதிக்கவில்லை’ என்பது மிகப்பெரிய பொய்யாகும். தீபம் ஏற்றப்பட்டு விட்டது.**

**கார்த்திகை தீபம் ஏற்ற அரசு எந்தத் தடையும் விதிக்கவில்லை. பல்லாண்டுகளாக தீபம் ஏற்றப்படும் இடத்தை மாற்றிவிட்டு வேறு இடத்தில் ஏற்ற வேண்டும் என்று கேட்பது தான் பிரச்சினையாக உள்ளது.**

1996 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், “உச்சிப்பிள்ளையார் கோவில் தீபத்தூணில் தீபம் ஏற்றும் இடம் தான் பாரம்பர்யமானது” என்று சொல்லப்பட்டு உள்ளது. 2014 உயர்நீதிமன்ற அமர்விடம் கேட்ட ஆதாரங்கள் தராததால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. 7.12.2017 ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பில் எங்கு தீபம் ஏற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டதோ அதன்படி தான் அரசு செயல்பட்டு வருகிறது. **‘தர்கா அருகில் உள்ள மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்பதற்கான ஆகம ஆதாரம் ஏதும் இல்லை. அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கத் தேவையில்லை’** என்று தீர்ப்பு வந்தது.

இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பில் கூட இவர்களது கலவர நோக்கத்துக்கு தடை விதித்துவிட்டார்கள் நீதிபதிகள். “கோயில் நிர்வாகம் மட்டுமே தீபம் ஏற்ற வேண்டும். பொதுமக்கள், அரசியல் கட்சியினரை அனுமதிக்கக் கூடாது.” என்று சொல்லி இருக்கிறார்கள் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரனும், கே.கே.ராமகிருஷ்ணனும். இப்படி அமைதியாக நடப்பதை இங்குள்ள கும்பல் விரும்பாது.

**தமிழ்நாட்டின் கோவில்கள் அமைதியாக இருக்கின்றன. லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி வணங்கி வருகிறார்கள். இந்த நான்கரை ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டின் அனைத்துக் கோவில்களும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. எந்தக் கோவில் திருவிழாக்களிலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. உண்மையான பக்தர்கள் விரும்பும் ஆட்சியாக இதனை முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார்கள். இதில் தீயைப் போட்டு அமைதியைக் குலைக்க யார் நினைத்தாலும், அதனை தமிழ்நாட்டு மக்களே விரும்ப மாட்டார்கள்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/ ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், தா.மோ.அன்பரசன், அர.சக்கரபாணி, மா. சுப்பிரமணியன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், இ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் டாக்டர். கே.சு.பழனிசாமி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) மரு.மு.வீரப்பன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆட்டோ ஓட்டுநர்களுக்கு திராவிட பொங்கல் திருவிழாவை முன்னிட்டு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொங்கல் பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றினார். கழகத் தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலத் தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்ட் டி.பிரகாஷ், துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பில்

# திராவிட பொங்கல் திருவிழா - 8,456 பேருக்கு பொங்கல் பொருட்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, ஜன.9-

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் திராவிட பொங்கல் திருவிழா 10.01.2026 சனிக்கிழமை மாலை 4.00 மணி அளவில், சென்னை பெரியார் நகர், கொளத்தூர் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் பொங்கல் வைத்து கொண்டாடி தொடர்ந்து சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் கொளத்தூர் தொகுதி கழக நிர்வாகிகள் 3917 பேருக்கும்,

தொடர்ந்து அப்பள்ளியின் மற்றுமொரு வளாகத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி பெற்ற / பெறுகின்ற 4500 மாணவர்கள், கபாலீஸ்வரர் கல்லூரியில் பணியாற்றும் 39 அலுவலர்கள் என 8,456 பேருக்கு பொங்கல் பொருட்கள், புத்தாடைகள் மற்றும் பரிசுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று தன் பொற்கரங்களால் வழங்கி பொங்கல் வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றுகிறார்.

இந்த இனிய பொங்கல் திருநாளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன்.எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், இரா.விடுதலை, ஐ.சி.எப்.வ.முரளி தரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதாமகேஷ்குமார் எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், எஸ்.தனசேகர், டி. யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி. எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. மற்றும் கழக நிர்வாகி கள், முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

## “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி”

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை, ஜன.9-*

*கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 இன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 09.01.2026 வெள்ளிக்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.*

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

*மாலை: 4.00 மணி: வட்டம் 67அ, பாகம் 153. இடம்: எண்: 12/20, 4வது தெரு ஜானகிராம் நகர், பெரம்பூர், சென்னை 600011.*

*மாலை: 4.30 மணி: வட்டம் 67அ , பாகம் 157. இடம்: எண் :11/3C தீட்டி தோட்டம். 1வது தெரு, பெரம்பூர், சென்னை600011.*

*மாலை: 5.00 மணி: வட்டம் 67அ , பாகம் 164. இடம்: எண்: 20/18, 1வது வடக்கு தெரு, கென்னடி சதுக்கம், பெரம்பூர், சென்னை 600011.*

*மாலை: 5.30 மணி: வட்டம் 67அ , பாகம் 165. இடம்: எண் : 4/7, காமராஜர் 2வது தெரு, கென்னடி சதுக்கம், பெரம்பூர், சென்னை600011.*

*மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.*



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இடைக்கழி நாடு பேரூராட்சி தலைவர் சம்யுக்தா அய்யனார் ஏற்பாட்டில் சமத்துவ பொங்கல் விழா மற்றும் ஐந்தாயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி விளம்பூர் கலைஞர் திடலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் உழவர் நலன் மற்றும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஐந்தாயிரம் பேருக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகள் மற்றும் பரிசு பொருட்களை வழங்கினர். அருகில் பேரூர் செயலாளர் மோகன்தாஸ், மாவட்ட அவைத்தலைவர் இனியரசு, பேரூர் துணை செயலாளர் ரஞ்சித் குமார், மாணவரணி துணை அமைப்பாளர் சரண்ராஜ், சமூக ஆர்வலர் அய்யனார் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.